# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
**MCOP. No.103/2023**

| | |
|---|---|
| சாட்சி | -PW1 |
| பெயர் | -திரு. விஜய் |
| தந்தை பெயர் | -திரு.செந்தாமரை |
| வயது | - 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08**.2026.**

**குறுக்கு விசாரணை** (1ம் எதிர்மனுதாரர் ஒரு தலைபட்சமாக ஆக்கப்பட்டார்)

**கு.வி. (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

1. என்னுடைய அப்பா படிக்கவில்லை. ம.சா.ஆ.17 எனது அப்பாவின் ஆதார்கார்டு. என்னிடம் காண்பிக்கப்படுவது என்னுடைய வீட்டு குடும்ப அட்டை என்றால் சரி. அது **எ.ம.சா.ஆ.1** ஆகும். ஆதார்கார்டு மற்றும் குடும்ப அட்டையை வைத்து பார்க்கும் போது வழக்கிற்காக என் தந்தையின் வயதை குறைவாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சடல கூராய்வு அறிக்கையில் எனது தந்தையின் வயதை மருத்துவர் அனுமானத்தின் பேரில் குறிப்பிட்டுள்ளார் என்றால், சரியல்ல. சடல கூராய்வு மருத்துவரை கூப்பிட்டு விசாரித்தால் தான் எனது தந்தையின் வயது எதன் அடிப்படையில் 50 என நிர்ணயித்தார் என்பது தெரியவரும் என்றால், சரிதான். Post Mortem மருத்துவரை பார்த்து எனது தந்தைக்கு வயது 50 என்று காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் Road Rolar வேலை செய்கிறார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அவரது வருமானத்தை நிருபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

2. மனு பத்தி 3ல் இறந்தவரின் வயது 52 என சொல்லியுள்ளோம் என்றால், சரி. எனது தகப்பனார் Road Rolarல் ஓட்டுநராக தான் பணிபுரிந்தார். அவர் யாரிடம்

ஓட்டுநராக வேலை செய்தார் என்று அவருடைய முதலாளி விவரம் பற்றி மனு பத்தி 5ல் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். எனது சத்தியப்பிரமாண வாக்குமூலத்திலும் எனது அப்பா யாரிடம் வேலை செய்தார் அவருடைய நிறுவனமோ தனி நபரோ, முதலாளி பெயர் விவரமோ குறிப்பிடவில்லை என்றால், சரிதான். Road Rolar ஓட்டுவதற்கு தகுதியான ஓட்டுநர் உரிமம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரி.

3. ம.சா.ஆ.7ன் படிக்கு இருசக்கர வாகனம் TN-73AA-5718 வாகன ஓட்டுநராவும், அந்த வாகனத்தின் உரிமையாளராகவும் இருந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.7 மோட்டார் வாகன அறிக்கையை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரி. நான் தாக்கல் செய்த மசா.ஆ.7 ஆவணத்தையே என்னுடைய வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. எனது அம்மா விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால், சரி. மனுதாரர்கள் யாரும் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை.

4. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை யார் தகவல் கொடுத்தது என்றால், என் அம்மா தான் போலீசில் புகார் கொடுத்தார். எனது அம்மா விபத்தை நேரடியாக பார்க்காமல் பார்த்ததாக தவறான தகவலை போலீசில் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. விபத்து எவ்வாறு நடந்தது என எனது அம்மாவிற்கு தான் தெரியும் என்றால், சரி. எங்களது மனுவிலும் எனது நிருபண வாக்குமூலத்திலும் எனது அப்பாவிற்கு தலை மற்றும் மற்ற இடங்களில் அடிபட்டு இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரி. எனது தகப்பனார் இறப்பிற்கு மூல காரணமே தலையில் ஏற்பட்ட காயம் என்றால், சரிதான். எனது மனுவிலோ, சத்தியபிரமாண வாக்குமூலத்திலோ எந்த இடத்திலும் எனது தகப்பனார் தலைகவசம் அணிந்து கொண்டு இருசக்கர வாகனம் ஓட்டி சென்றார் என்று வாக்குமூலத்திலோ மனுவிலோ குறிப்பிடவில்லை என்றால், சரி. எனது தகப்பனார் ஹெல்மட் அணிந்துகொண்டு இருசக்கர வாகனம் ஓட்டி கொண்டு போயிருந்தால் உயிர்சேதம் ஏற்பட்டிருக்காது என்றால், சரியல்ல. இந்த விபத்திற்கு மூலகாரணமே எனது தகப்பனார் என்றால், சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் TN-73-AA-5718 வாகனத்தில் பின்னால்இடித்ததாக முதல் தகவல்

அறிக்கை, மனு, சத்தியபிரமாண பத்திரிக்கை சொல்லப்பட்டுள்ளது என்றால், சரி. இந்த விபத்திற்கு முழு காரணமும் எனது தகப்பனார் என்றும், அவருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால், சரியல்ல. எது எவ்வாறு இருப்பினும் இந்த விபத்திற்கு எனது தகப்பனாரின் பங்களிப்பும் இருக்கிறது என்றால், சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் TN-73-AA-5718 வாகனத்திற்கு உரிமையாளராக 1ம் எதிர்மனுதாரரே இருந்துகொண்டு அவரே விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு தகுதியான ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டியுள்ளார் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரரே பாலிசி நிபந்தனைகளை மீறியுள்ளார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

5. எனது சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியின் இறுதியில் எவ்வளவு நஷ்ட ஈடு தொகை என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். என்ன நஷ்ட ஈடு எவ்வளவு கோரிக்கை வைத்துள்ளோம் என்று தெரியாமலேயே சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து சட்டபடியும் சங்கதிபடியும் வாரிசு நிபந்தனைபடியும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the 04th day of August 2026.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.08.05 02:13:22 +0600

Additional District Judge(FTC),
Vellore.